DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : C. C. No. 87/2024**

**Prosecution Witness : P. W. 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுடலைமூர்த்தி | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 06/03/2026

A1 to A5 absent.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வருகிறேன். வேலை எதுவும் செய்யவில்லை. கடந்த 23.06.2019 அன்று நான் செங்குன்றத்திலுள்ள பழைய ஏர்போர்ட்டுக்கு எதிரில் பூலோக பாண்டியன் என்பவர் நடத்தி வரும் டீக்கடையில் டீ மாஸ்டராக 4 வருடங்களாக வேலை செய்து வந்தேன். அன்றைய தினம் மாலை 4 முதல் 5 மணியளவில் எங்கள் கடைக்கு 5 நபர்கள் வந்து வடை டீ கேட்டார்கள். அந்த 5 நபர்களை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். சிகரெட், வடை, பழம் ஆகியவற்றை வாங்கி சாப்பிட்டார்கள். கடையில் நான் எனது ஓனர் பூலோக பாண்டியன், வேலை செய்யும் கணேசன் ஓனரின் மனைவி மகாலெட்சுமி ஆகியோர் கடையில் இருந்தோம். நாங்கள் அவர்களிடம் காசு கேட்டதற்கு எங்கள் அனைவரையும் அவர்கள் அடித்தார்கள். எங்கள் ஓனரை கல்லாலும், என்னை கண்ணாடி ஜாடியாலும் அடித்தார்கள். சிலிண்டரை தூக்கி என் ஓனரின் மீது போடும் போது அதை நான் தடுத்துவிட்டேன். எனக்கு வலது காதுக்கு கீழ் காயம் மற்றும் வலது கை கட்டைவிரல்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.03.06 18:02:43 +0530

மற்றும் இடது கை நடுவிரலில் கல்லால் அடித்ததில் காயம் ஏற்பட்டது. வழக்கு சம்மந்தமாக புகார் கொடுக்க நானும் எனது ஓனரும் காவல் நிலையம் சென்றோம். நானும் ஓனரும் ஒரு நாள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றோம். என் ஓனருக்கு தலையில் 4 தையல்கள் போடப்பட்டது. நாங்கள் சிகிச்சை பெற்று திரும்பினோம். என்னிடம் காட்டப்படும் 6 புகைப்படத்திலுள்ள நபர்கள் தான் எங்களை அன்று தாக்கினார்கள். **அந்த புகைப்படங்கள் அசா.ஆ.2 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த புகைப்படத்தில் கீழே விழுந்து கிடக்கும் வெள்ளை சட்டை போட்ட நபர் தான் பூலோக பாண்டியன் ஆவார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

நான் 2016லிருந்து 2019 வரை பூலோக பாண்டியன் கடையில் வேலை செய்தேன். என்னுடைய சொந்த ஊர் புதுக்குளம், நாங்குநேரி தாலுகா ஆகும். பூலோக பாண்டியன் எனக்கு உறவினரா என்றால், இல்லை. எனக்கு எப்படி பழக்கமானார் என்றால், என் மகன் முதலில் அவருடைய கடையில் வேலை பார்த்தார். அதன் மூலம் எனக்கு பழக்கமானது. பூலோக பாண்டியனின் மச்சான் கணேசன் என்றால், சரிதான். மகாலெட்சுமி அவரது மனைவி என்றால் சரிதான். நான் அவர்கள் வீட்டில் தங்கி தான் வேலை செய்தேன். நான் புகார் கொடுத்தேனா என்றால், இல்லை. சம்பவம் நடந்த இடம் பைபாஸ் சாலை பொதுமக்கள் போக்குவரத்து மிகுந்த இடம் என்றால், சரிதான்.

அச்சமயம் டீ குடித்துவிட்டு நான்கைந்து பேர் இருந்தார்கள். சம்பவம் உண்மையில் நடைபெற்றிருந்தால், அந்த டீ குடித்த நபர்களில் யாரையாவது சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றால், தெரியாது. பூலோக பாண்டிக்கு எதிரிகள் அதிகம் என்பதால், பல்வேறு புகார்கள் அவர்மீது இருப்பதால், அந்த நோக்கத்தில் பழிவாங்கும்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.03.06 18:02:52 +0530

விதத்தில் வேறு நபர்கள் அவரை அடித்திருக்கலாம் என்றால், சரியல்ல. சம்பவம் நடந்த நேரத்தில் எதிரிகள் அங்கு இல்லை என்றாலும், வேறு ஏதோ நேரத்தில் நடந்த சம்பவம் குறித்த புகைப்படத்தை வைத்து தான் நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா.1 ன் உறவினர் என்று மறைத்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.03.06 18:03:00 +0530